# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.24/2022** **நாள் :28.06.2022**

**பணி மேற்கொள்ளும் போது உயிரிழந்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர் நெல்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு**
**நிவாரணத் தொகையாகரூ.15 லட்சம் வழங்கிட**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்அவர்கள் உத்தரவு**

பணி மேற்கொள்ளும் போது உயிரிழந்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர் நெல்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையாக ரூ.15 லட்சம் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் இன்று (28.06.2022) காலை முதல் ஜெட் ராடிங் மற்றும் சூப்பர் சக்கர் இயந்திரத்தைப் பயன்படுத்தி மாதவரம் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் கழிவுநீர் அடைப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது, பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் ஒப்பந்தத் தொழிலாளி நெல்சன் என்கிற கட்டாரி வயது சுமார் 26, இயந்திர துளையில் ஏதேனும் கல்/துணி அடைக்கப்பட்டிருக்கிறதா என்று சாலையில் நின்று கவனித்த போது, இயந்திர துளையில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து விட்டார். அவரை காப்பாற்ற முயன்ற ஒப்பந்த தொழிலாளி திரு.ரவி வயது சுமார் 35, அவரும் இயந்திர துளையில் விழுந்து விட்டார் உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இருவரும் உயிருடன் மீட்கப்பட்டு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் ஒப்பந்தத் தொழிலாளி, நெல்சன் என்கிற கட்டாரி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேலும் மற்றொரு தொழிலாளி திரு. ரவி அவர்களுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உயிரிழந்த தொழிலாளி நெல்சன் என்கிற கட்டாரி அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடாக 07.06.2022 தேதியிட்ட நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். 83-இன் படி ரூ. 15 லட்சம் வழங்கப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்